00515

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 05

**EPU5256–ஆரம்பக்கல்விக்கான சிறுவர் உரிமைகள்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 14.06.2025 | நேரம்:பி.ப 01.30 - பி.ப 03.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் (UNCRC) தொடர்பான மாநாட்டில் குறிப்பிட்டுள்ள உரிமைகளின் வகைகளைச் சுருக்கமாகக் கூறுக.

2. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் மாநாட்டை செயற்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் **மூன்று (03)** சவால்களை விளக்குக.

3. இலங்கையில் ஒல்லாந்தர் (Dutch) தங்கள் ஆட்சிக்காலத்தில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக எடுத்த **மூன்று (03)** முக்கிய நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

4. "பாலியல் துஸ்பிரயோகங்கள் தற்போது பொதுவானது என்பதை ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன."

   பாலியல் துஸ்பிரயோகத்திலிருந்து ஆரம்ப பாடசாலை பிள்ளைகளைப் பாதுகாக்க ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய **ஐந்து (05)** நடைமுறைகளை எழுதுக.

5. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்திக்கான உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் இலங்கை அரசாங்கத்தால் எடுக்கக்கூடிய **ஐந்து (05)** நடவடிக்கைகளை பட்டியலிடுக.

6. இணைய மிரட்டல் (Cyber Bulling) ஆரம்ப பாடசாலை பிள்ளைகளை பாதுகாக்க பெற்றோர் எடுக்கக் கூடிய **ஐந்து (05)** நடைமுறைகளை முன்மொழிக.

7. சிறுவர் உரிமைகள் தொடர்பாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் நன்மைகள் **ஐந்தினைப் (05)** பெயரிடுக.

8. ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் உரிமைகளை உறுதி செய்வதற்கு வகுப்பறையில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் எடுக்கக் கூடிய **ஐந்து (05)** நடைமுறைகளை எழுதுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. "உயிர் வாழ்வதற்கான உரிமை" (Right to Survival) என்றால் என்ன?

   (03 புள்ளிகள்)

   ii. உயிர் வாழ்வதற்கான உரிமைகள் ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒட்டுமொத்த விருத்தியை எவ்வாறு பாதிக்கின்றன? உதாரணங்கள் மூலம் விளக்குக.

   (07 புள்ளிகள்)

   iii. ஆரம்ப பாடசாலை வயதுடைய பிள்ளைகளின் உயிர் வாழ்வதற்கான உரிமைகளை உறுதி செய்வதற்கு அப் பெற்றோர்கள் எடுக்கக்கூடிய **மூன்று (03)** நடைமுறைகளை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

   (10 புள்ளிகள்)



77

00515

10. "இலங்கை உட்பட பல நாடுகளில் ஆரம்ப பாடசாலை பிள்ளைகளிடையே தொலைக்காட்சி மற்றும் கணினி விளையாட்டுக்கு அடிமையாதல் ஒரு கடுமையான பிரச்சினையாக மாறியுள்ளது."

i. ஆரம்ப பாடசாலை பிள்ளைகள் தொலைக்காட்சி மற்றும் கணினி விளையாட்டுக்கு அடிமையாவதற்குரிய **மூன்று (03)** காரணங்களைக் கூறுக.

(03 புள்ளிகள்)

ii. ஆரம்ப பாடசாலை ஆசிரியராக பிள்ளைகள் தொலைக்காட்சி மற்றும் கணினி விளையாட்டுக்களுக்கு அடிமையாவதை தவிர்க்க எடுக்கக்கூடிய **மூன்று (03)** நடைமுறைகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

iii. மேற்கூறிய நடைமுறைகளை பயன்படுத்துவதில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் **இரண்டு (02)** சிக்கல்களை கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்கான பொருத்தமான ஆலோசனைகளை வழங்குக.

(10 புள்ளிகள்)

11. i. விசேட தேவையுடைய பிள்ளைகள் பாடசாலையில் தங்கள் உரிமைகளை செயற்படுத்தும் போது எதிர்கொள்ளும் **மூன்று (03)** சவால்களை எழுதுக.

(03 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த பாடசாலை என்ன ஆதரவை வழங்க முடியும்? உதாரணம் மூலம் விளக்குக.

(07 புள்ளிகள்)

iii. மேற்குறிப்பிட்ட ஆதரவை வழங்கும் போது பாடசாலை எதிர்கொள்ளும் **ஐந்து (05)** சிக்கல்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

12. "விசேட தேவையுடைய ஆரம்ப பாடசாலை பிள்ளைகளின் பங்கு கொள்வதற்கான (Right to Participation) உரிமைகளை பாதுகாப்பதில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் வகிபங்கு வரமுறையற்றது"

i. பங்கு கொள்வதற்கான உரிமைகள் (Rights to participation) என்பதால் நீர் கருதுவது யாது?

(03 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய பிள்ளைகள் பாடசாலையில் பங்குகொள்வதற்கான உரிமையை உறுதி செய்வதற்கு ஆரம்ப பாடசாலை ஆசிரியரொருவர் எடுக்கக்கூடிய **ஐந்து (05)** நடவடிக்கைகளைக் கூறுக.

(07 புள்ளிகள்)

iii. அத்தகைய சூழலில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் எதிர்கொள்ளும் **மூன்று (03)** பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரைக்குக.

(10 புள்ளிகள்)

13. i. சிறுவர் உரிமைகள் குறித்த சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது கட்புல ஊடகங்களில் (Visual media) காணக்கூடிய குறைபாடுகளை எழுதுக.

(04 புள்ளிகள்)

ii. நீங்கள் குறிப்பிட்டுள்ள (குறைந்த பட்சம் **இரண்டு (02)** இந்தக் குறைபாடுகள் ஒவ்வொன்றுக்குமான காரணங்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

iii. வினா ஒன்றில் (i) குறிப்பிட்டுள்ளபடி கட்புல ஊடகங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு **இரண்டு (02)** பொருத்தமான பரிந்துரைகள் பற்றி கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -



73